# கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
## (உயர்கல்விப் பிரிவு)

**வயம்ப பல்கலைக்கழக நகரப்பகுதி (Township) அபிவிருத்தித் திட்டம்**

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படையில்)

சுமார் 28 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்தப் பெறுமதியைக் கொண்ட சவூதி அரேபிய அரசாங்கத்தின் நிதியுதவியில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் (உயர்கல்விப் பிரிவு) மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும், வயம்ப பல்கலைக்கழக நகரப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் (WUTDP) எஞ்சியுள்ள திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக, அத்திட்டத்தில் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி திட்டமானது, முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் விதிகள் மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு அமைவாக, குளியாப்பிட்டியவில் அமைந்துள்ள இலங்கை வயம்ப பல்கலைக்கழக வளாகத்தினுள் தனது திட்ட முகாமைத்துவப் பிரிவை நிறுவியுள்ளது.

| பதவியின் பெயர் | சம்பளப் பிரிவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | MSC 02/2026 இலக்கம் 3.2.3 உப பிரிவின் பிரகாரம் | 02 |

பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள் மற்றும் 2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகள் பின்வருமாறு:

**முகாமைத்துவ உதவியாளர் - (02 வெற்றிடங்கள்)**

மேற்கூறிய பதவிக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்:

01. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

02. க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் (பொது வினாத்தாள் தவிர்த்து) சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருப்பது இத்தேவைக்குப் போதுமானதாகும்.

**பொதுவான நிபந்தனைகள்**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்து அடிப்படைத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

**வயதெல்லை:** 64 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்புடைய பதவிக்குரிய சம்பளப் படிநிலை மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் 02/2026ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் மற்றும் செயற்றிறன் மற்றும் சேவைத் தேவைப்பாட்டைக் கவனத்திற் கொண்டு வருடாந்தம் சேவைக்காலம் நீடிக்கப்படும்.

**ஏனைய நன்மைகள்:**

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் தமது சம்பளத்தின் 8% பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதுடன் தொழில் வழங்குநர் 12% பங்களிப்புச் செய்வார் மற்றும் தொழில் வழங்குநர் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்வார்.

**விண்ணப்பிக்கும் முறை:**

தகுதிகள், அனுபவம் மற்றும் பிற தொடர்புடைய விவரங்களைக் குறிப்பிடும் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை கல்வித் தகுதிகள் மற்றும் தொழில்முறை அனுபவம் மற்றும் தொடர்பு தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் இரண்டு (02) உறவினரல்லாத சான்று பகர்வோரின் விவரங்கள் சகிதம் திட்டப் பணிப்பாளர், வயம்ப பல்கலைக்கழக நகர்பகுதி அபிவிருத்தித் திட்டம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், லயனல் ஜயதிலக்க மாவத்தை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2026-08-10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்ய வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஏற்கனவே அரசாங்கம் / அரசு சார்ந்த சேவைகளில் உள்ள ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை அவர்களின் தொடர்புடைய தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**வயம்ப பல்கலைக்கழக நகர்பகுதி அபிவிருத்தித் திட்டம்,**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,**
**குளியாப்பிட்டிய**
**திகதி: 2026-07-16.**